# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்

**O.S. No.78/2018**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியின் வாக்குமூலம் 13.07.2022 ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பெயர் : தேவேந்திரன் பி.சா.2 வயது :

**குறுக்கு விசாரணை:**

அண்ணாமலை நகர், திருவொற்றியூரில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை கருநாகரன் என்பவர் என்னை அழைத்துவந்தார். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். நான் 15 வருடங்களாக கொத்தனார் வேலை செய்து வருகிறேன். வழக்கு சொத்தில் நான் கட்டுமான பணியினை செய்தேன். 2016ம் வருடம் ஜனவரி மாதம் பொங்கலுக்கு ஒரு வாரத்திற்கு முன்பு வேலை செய்தேன் நான் மட்டும்தான் வேலை செய்தேனா என்றால் உதவி செய்ய ஒரு ஆள் வைத்திருந்தேன். வழக்கு சொத்தின் முகவரி வசந்தா நகர் கதவு எண் எனக்கு தெரியாது. அதில் தரைத்தள்த்தில் இரண்டு போஸன்களும் முதல் தளத்தில் இரண்டு போஸ ன்களும் இருந்தது அதில் வாதி முதல் தளத்தில் உள்ள இரண்டாவது போஸனில் இருந்தார். மேற்சொன்ன விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. நான் வழக்கு சொத்தில் சென்று வேலை செய்தேன் அங்கு வாதி குடியிருந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதிதான் வழக்கு சொத்தினை சேதப்படுத்தினார் என்று என்னால் அறுதியிட்டு சொல்லமுடியாது என்றால் சரி. நான் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்தேன். 2016ம் வருடம் கொத்தனார் வேலைக்கு 800 ரூபாய் கூலிக்கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் கட்டி தொழிளாலர் சங்கத்தில் உறுப்பினராக இல்லை. நான் கட்டி வேலை

செய்துவருகிறேன் என்பதற்கு ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பிரதிவாதியை எனக்கு 2016ம் வருடத்திலிருந்துதான் தெரியும். கருநாகரன் என்பவர் நீதான் வேலை செய்தாய் அதனால் வந்து சாட்சி சொல் என்று சொன்னதால் வந்துள்ளேன். கருநாகரன் என்பவர் வேலை செய்ய கூப்பிட்டதால் வேலை செய்தேன். மற்றபடி எவ்வாறு சேதம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாது. வாதி குடியிருந்த இடத்தில் உணவு அறுந்தும் இடம் என்று தனியாக ஏதும் இல்லை என்று சொன்னால் உள்ளது. வாதி எப்பொழுது வாடகைக்கு வந்தார் என்பதும் எப்பொழுது காலி செய்து சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

Sd/-Tmt.M.S.Varalakshmi, B.A., B.L.,
District Munsif, Thiruvottiyur. Dated 13.07.2022.